DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 698/2020** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : காளிதாஸ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30 July 2026.

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது மேட்டுவடகரையில் வசித்து வருகிறேன். நான் செக்யூரிட்டி வேலை செய்து வருகிறேன். எதிரி எனக்கு தெரியும். 2016–ம் ஆண்டு சங்கரன்கோவில் வட்டர் டேங் AK3 ஸ்டார் கம்பெனியில் எதிரி கருப்பசாமி உரிமையாளராக இருந்தார். வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பும் வேலை பார்த்து வந்தார். சிங்கம்பூர் மற்றும் மெக்காவிற்கு சுப்ரவேசர் வேலைக்கு ரூபாய் 2,30,000 கொடுங்கள் உங்களை நான்

வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பி வைக்கிறேன் என்று கூறினார். நான் 3 தவனையகா ரூபாய்2,30,000 அவரின் கையில் கொடுத்தேன். மீண்டும் எனக்கு விசா வரும் என்று என்னை சென்னை ஏர்போட்டிற்கு வரச்சொன்னார். நான் சென்னை ஏர்போட்டிற்கு சென்றவிட்டேன். பின்னர் எதிரி கருப்பசாமி கூடுதலாக ரூபாய் 2,00,000 கொடுங்கள் என்று எதிரி கருப்பசாமி என்னிடம் கேட்டார். என்னால் கொடுக்கமுடியாததால் நான் ஊருக்கு திரும்பி வந்துவிட்டேன். இது சம்மந்தமாக சங்கரன்கோவில் காவல் நிலையத்தில் என்னை ஏமாற்றிவிட்டதாக எதிரி மீது நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை அனுமதிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

M MARI

Digitally signed by M MARI
Date: 2026.07.30 19:40:28 +0530